## கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை: ஆய்வுக்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு



**வாரணாசி:** கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை ஆய்வுக்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது. உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி மசூதியில் நேற்று தொல்லியல் துறை நிபுணர்கள் ஆய்வு நடத்தினர்.

உத்தர பிரதேசம் வாரணாசியில் காசி விஸ்வநாதர் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலை ஒட்டி கியான்வாபி மசூதி உள்ளது. முகலாய மன்னராட்சி காலத்தில் காசி விஸ்வநாதர் கோயிலின் ஒரு பகுதியை இடித்துவிட்டு மசூதி கட்டியதாகக் கூறப்படுகிறது. வாரணாசி மாவட்ட நீதிமன்ற உத்தரவின்படி கடந்த ஆண்டு கியான்வாபி மசூதியில் நடத்தப்பட்ட கள ஆய்வில், மசூதியின் ஒசுகானாவின் நடுவே சிவலிங்கம் இருப்பது கண்டறியப்பட்டது.

இந்த சூழலில், கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை ஆய்வுக்கு உத்தரவிடக் கோரி இந்துக்கள் சார்பில் வாரணாசி மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதை விசாரித்த நீதிபதி ஏ.கே.விஸ்வேஷா, கியான்வாபி மசூதியில் இந்திய தொல்லியல் துறை அறிவியல்பூர்வமான ஆய்வினை நடத்த உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை மாநில உயர் நீதிமன்றம் உறுதி செய்தது. இதை எதிர்த்து கியான்வாபி மசூதி நிர்வாகம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

மசூதி நிர்வாகம் முன்வைத்த வாதத்தில், “கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை ஆய்வு நடத்துவது வழிபாட்டுத் தலங்கள் சட்டத்துக்கு எதிரானது. தொல்லியல் துறை ஆய்வால் மசூதி சேதமடையும்" என்று தெரிவிக்கப்பட்டது.

EVA STALIN IAS ACADEMY

இந்திய தொல்லியல் துறை சார்பில் ஆஜரான மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா கூறும்போது, “கியான்வாபி மசூதியின் எந்த பகுதியும் தோண்டப்படாது. அறிவியல் பூர்வமாக ஆய்வு நடத்தப்படும்" என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட தலைமை நீதிபதி சந்திரசூட், கியான்வாபி மசூதிக்கு எவ்வித சேதமும் ஏற்படாமல் தொல்லியல் துறை ஆய்வு நடத்த அனுமதி வழங்கினார். ஆய்வு தடை விதிக்க தலைமை நீதிபதி மறுத்துவிட்டார்.

இதனிடையே இந்திய தொல்லியல் துறையை சேர்ந்த 64 நிபுணர்கள் நேற்று காலை 8 மணிக்கு கியான்வாபி மசூதியில் ஆய்வை தொடங்கினர். தொழுகைக்காக மதியம் 12 மணிக்கு ஆய்வு நிறுத்தப்பட்டது. பின்னர் மாலை 3 மணிக்கு மீண்டும் ஆய்வு தொடங்கி மாலை 5 மணி வரை நீடித்தது. தொல்லியல் துறை ஆய்வை பார்வையிட இந்துக்கள் தரப்பில் 7 பேருக்கும் முஸ்லிம்கள் தரப்பில் 9 பேருக்கும் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இந்துக்கள் தரப்பில் 7 பேர் சென்றனர். முஸ்லிம்கள் தரப்பில் யாரும் செல்லவில்லை.

ஆய்வு குறித்து தொல்லியல் துறை வட்டாரங்கள் கூறியதாவது:

கியான்வாபி மசூதியை 4 பகுதிகளாகப் பிரித்துள்ளோம். அனைத்துபகுதிகளிலும் அதிநவீன கேமராக்கள் பொருத்தப்பட்டு உள்ளன. ஆய்வு முழுவதும் கேமராக்களில் பதிவு செய்யப்படும். முதலில் சுவர்கள் ஸ்கேன் செய்யப்படும். அதன்பிறகு மற்ற பகுதிகளை ஸ்கேன் செய்வோம்.

மசூதியின் எந்த பகுதியையும் தோண்ட மாட்டோம். ஜிபிஆர் தொழில்நுட்பத்தில் ஆய்வு நடத்தப்படும். இதன்படி பூமிக்கு அடியில் ரேடியோ அலைகள் செலுத்தப்பட்டு அதன்மூலம் ஆய்வு நடத்தப்படும். சில பகுதிகளை கார்பன் டேட்டிங் மூலம் ஆய்வு செய்வோம். சுவரின் நிற மாற்றம், அஸ்திவாரம், மண் தொடர்பாகவும் ஆய்வு நடத்தப்படும். முழுமையாக ஆய்வு நடத்த 4 வாரங்கள் தேவை என்று வாரணாசி மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளோம்.

இவ்வாறு தொல்லியல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தொல்லியல் துறை ஆய்வை முன்னிட்டு கியான்வாபி மசூதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மசூதி வளாகத்தை சுற்றி ஒரு கி.மீ. தொலைவுக்கு வெளி நபர்கள் அனுமதிக்கப்படவில்லை. காசி விஸ்வநாதர் கோயில் வளாகத்திலும் போலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

**முழு கொள்ளளவை நெருங்கியது கபினி அணை: காவிரியில் இருந்து தமிழகத்துக்கு விநாடிக்கு 11 ஆயிரம் கன அடி நீர் திறப்பு**



**பெங்களூரு:** கர்நாடகா மற்றும் கேரளாவில் பரவலாக மழை பெய்து வருவதால் கபினி அணை முழு கொள்ளளவை நெருங்கியுள்ளது. இதனால் தமிழகத்துக்கு விநாடிக்கு 11 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் காவிரி நீர்ப் பிடிப்பு பகுதிகளான குடகு, மைசூரு, மண்டியா உள்ளிட்ட இடங்களில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக மழை பெய்து வருகிறது.

தென்மேற்கு பருவமழை பரவலாக பெய்து வருவதால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் தலக்காவிரி, பாகமண்டலா ஆகிய இடங்களில் சாலையை மூழ்கடித்தவாறு வெள்ளம் பாய்கிறது.

இதனால் கிருஷ்ணராஜசாகர், ஹேமாவதி, ஹாரங்கி ஆகிய அணைகளுக்கு கணிசமான அளவில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. கேரள மாநிலம் வயநாட்டிலும் மழை பெய்து வருவதால் கபிலா ஆற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் மைசூருவில் உள்ள கபினி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று மாலை நிலவரப்படி, மண்டியா மாவட்டம் ஸ்ரீரங்கப்பட்டணாவில் 124 அடி உயரம் உள்ள கிருஷ்ணராஜ சாகர் அணையின் நீர்மட்டம் 113.46 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு விநாடிக்கு 4 ஆயிரத்து 361 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து விநாடிக்கு 4 ஆயிரத்து 944 கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

மைசூரு மாவட்டத்தில், கடல் மட்டத்தில் இருந்து 2284 அடி உயரத்தில் உள்ள கபினி அணையின் நீர்மட்டம் 2283.50 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு விநாடிக்கு 4 ஆயிரத்து 442 கன அடி நீர் வந்துகொண்டிருக்கும் நிலையில், விநாடிக்கு 6 ஆயிரத்து 126 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

கிருஷ்ணராஜசாகர், கபினி ஆகிய இரு அணைகளில் இருந்து தமிழகத்துக்கு, மொத்தமாக விநாடிக்கு 11 ஆயிரம் கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

மேலும், தொடர்ந்து நீர்வரத்துகாரணமாக கபினி அணை முழு கொள்ளளவை நெருங்கியுள்ளதால் அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

**உலக வில்வித்தையில் இந்திய அணிக்கு தங்கம்**



வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய மகளிர் அணியினர் மற்றும் அணியின் நிர்வாகிகள், பயிற்சியாளர்

**பெர்லின்:** ஜெர்மனியின் பெர்லின் நகரில் உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று மகளிருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவில் ஜோதி சுரேகா, அதிதி சுவாமி, பர்னீத் கவுர் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி தங்கப் பதக்கம் வென்றது.

இறுதிப் போட்டியில் இந்திய அணி 235-229 என்ற கணக்கில் மெக்சிகோவை வீழ்த்தியது. முன்னதாக இந்திய அணி கால் இறுதி சுற்றில் 228-226 என்ற கணக்கில் சீன தைபேவையும், அரை இறுதி சுற்றில் 220-216 என்ற கணக்கில் கொலம்பியாவையும் தோற்கடித்தது.

## விஸ்வநாதன் ஆனந்தை பின்னுக்குத்தள்ளி இந்தியாவின் நம்பர் 1 செஸ் வீரரானார் குகேஷ்




குகேஷ் | கோப்புப்படம்

**சென்னை:** 5 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற இந்திய கிராண்ட் மாஸ்டரான விஸ்வநாதன் ஆனந்தை பின்னுக்குத்தள்ளி 17 வயதான குகேஷ் இந்தியாவின் நம்பர் 1 செஸ் வீரராகி உள்ளார்.

பிஃடே உலகக் கோப்பை செஸ் தொடர் அஜர்பைஜானில் நடைபெற்று வருகிறது. இதில் 17 வயதான இந்திய கிராண்ட் மாஸ்டரான குகேஷ் 2வது சுற்றில் அஜர்பைஜானின் மிஸ்ரடின் இஸ்கந்தரோவ் எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் 44-வது காய் நகர்த்தலின் போது குகேஷ் வெற்றி பெற்றார். இதன் மூலம் பிஃடேவின் லைவ் ரேட்டிங்கில் குகேஷ் 2755.9 புள்ளிகளுடன் விஸ்வநாதன் ஆனந்தை பின்னுக்குத்தள்ளி 9-வது இடத்தை பிடித்தார். விஸ்வநாதன் ஆனந்த் 2754.0 புள்ளிகளுடன் 10-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

செப்டம்பர் 1-ம் தேதி அடுத்த தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும். அதுவரை குகேஷ், ஆனந்தை விட முன்னிலையில் இருந்தால் இந்தியாவின் நம்பர் 1 செஸ் வீரராக உருவெடுப்பார். கடந்த 1987-ம் ஆண்டு முதல் விஸ்வநாதன் ஆனந்த், இந்தியாவின் நம்பர் 1 செஸ் வீரராக இருந்து வருகிறார். முன்னதாக 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் விஸ்வநாதன் ஆனந்தை, பிரவீன் திப்சே முந்தியிருந்தார். அப்போது திப்சே 2,485 புள்ளிகளும் ஆனந்த் 2420 புள்ளிகளும் எடுத்திருந்தனர்.

## உலக அளவிலான 5,000 மீட்டர் வேக நடை போட்டியில் 3-வது முறையாக தங்கம் வென்ற விருதுநகர் எஸ்.ஐ.



**ஸ்ரீவில்லிபுத்தூர்:** கனடாவில் நடந்து வரும் உலக காவல்துறை தடகளப் போட்டியில் கலந்து கொண்ட சார்பு ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி 5 ஆயிரம் மீட்டர் வேகநடை பிரிவில் 3-வது முறையாக தங்கம் வென்றுள்ளார்.

சிவகாசி அருகே ஈஞ்சார் பகுதியைச் சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி. இவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மொட்டமலையில் உள்ள ராஜபாளையம் சிறப்பு இலக்கு படை முகாமில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். இவர் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் காவல் துறையினருக்கான தடகளப் போட்டிகளில் பங்கேற்று வருகிறார்.

கடந்த 2019-ம் ஆண்டு சீனாவில் நடந்த உலக காவல் துறை தடகளப் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்று 5 ஆயிரம் மீட்டர் வேகநடை பிரிவில் தங்கம் வென்றார். இதையடுத்து அவருக்கு 2019-ம் ஆண்டுக்கான அண்ணா பதக்கம் வழங்கப்பட்டது. அதேபோல் 2022-ம் ஆண்டு நெதர்லாந்தில் நடைபெற்ற உலக காவல் துறை தடகளப் போட்டியிலும் இதேபிரிவில் தங்கம் வென்றார்.

இந்நிலையில் தற்போது கனடா நாட்டில் உலக காவல் துறை தடகளப் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் இந்திய அணி சார்பில் கலந்து கொண்ட சார்பு ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி, 5 ஆயிரம் மீட்டர் வேகநடை போட்டியில் முதலிடம்

பெற்று 3-வது முறையாக தங்கம் வென்றுள்ளார். அவருக்கு காவல் துறையினர் வாழ்த்து தெரிவித்தனர்.

EVA STALIN IAS ACADEMY